சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

////

# கணக்கீடு – 33 தரம் - 12

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 10

## தேர்ச்சி – 4.8 : வழு திருத்தம்

வாரம் - 10 தயாரிப்பு : சஜித்.sp

இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி BBA(Financial Spl), University of Colombo

1. சாணக்கியன் நிறுவனத்தின் பரீட்சை மீதியானது இணக்கமுற்று காணப்பட்டது. வேறுப்பாட்டுத் தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.
   1. கொடுத்த கழிவுக் கணக்கு மீதியானது ரூபா 3 000 தொகையினால் கூட்டிக்கூட்டப்பட்டது.
   2. சில்லறைகாசுக் கட்டுப்பாட்டு கணக்கு மீதியானது ரூபா 5 000 தொகையினால் குறைத்து கூட்டப்பட்டது.
   3. ரூபனிடம் காசோலை மூலம் இயந்திரக் கொள்வனவு ரூபா 50 000 கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டது.
   4. வருமதியாளரிடம் பெற்ற காசோலை ரூபா 8 000 வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.
   5. வெளிதிரும்பல் நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 23 000 பொதுப்பேரேட்டில் வரவு வைக்க வேண்டிய கணக்கில் ரூபா 32 000 எனப்பதியப்பட்டது.

**வேண்டப்படுவது:**
1) வழுக்களை திருத்துவதற்கான பொதுநாட்குறிப்புப் பதிவுகள்
2) திருத்தங்களுடன் கூடிய தொங்கல் கணக்கு

**2.** மெஸ்ஸி தனிநிறுவனத்தின் பரீட்சை மீதியானது இணக்கமுற்று காணப்பட்டது. வேறுப்பாட்டுத் தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.
   1. பெற்றக் கழிவு ரூபா 2 000 கொடுத்தக் கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
   2. வங்கி வைப்பிலிருந்து பெறப்பட்ட ரூபா 8 000 வட்டி வருமானமானது வட்டிச் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் காசுக் கட்டுப்பாட்டுக் சரியாக பதியப்பட்டுள்ளது.
   3. விற்பனைத் திரும்பல் மொத்தம் ரூபா 45 000 ஆனது விற்பனைக் கணக்கில் ரூபா 54 000 என வரவுவைக்கப்பட்டது.
   4. கொடுத்த கழிவு மொத்தம் ரூபா 11 000 கொடுத்தக் கழிவுக் கணக்கில் வரவு வைத்து காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
   5. கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூபா 8 000 எனும் தொகையினால் கூட்டிக் கூட்டப்பட்டது.

**வேண்டப்படுவது:**
1) வழுக்களை திருத்துவதற்கான பொதுநாட்குறிப்புப் பதிவுகள்
2) திருத்த முன் தொங்கல் கணக்கு மீதி

**3.** ஹாசினி நிறுவனம் பெறுமதிசேர் வரிக்கு **(VAT)** பதிவு செய்துள்ள நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் 31.03.2021 இல் தயாரித்த பரீட்சைமீதியின் வரவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 448 000 ஆகவும், செலவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 456 000 மும் காணப்பட்டது. வேறுப்பாட்டுத்தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு பரீட்சை மீதியானது தற்காலிகமாக சமப்படுத்தப்பட்டது. பின்னர் கணக்காய்வில் பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டது. (பெறுமதிசேர் வரி 10% எனக் கொள்க)
   1. பெறுமதிசேர் வரி உட்பட கடன்விற்பனை ரூபா 44 000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் சரியாக பதியப்பட்டு விற்பனைக் கணக்கில் செலவில் ரூபா 40 000 என பதியப்பட்டது.
   2. பெற்றக் கழிவு கணக்கு மீதி ரூபா 2 500 பரீட்சை மீதியில் வரவில் பதியப்பட்டது.
   3. பெறுமதிசேர் வரி உட்பட வெளிதிரும்பல் ரூபா 16 500 வெளிதிரும்பல் கணக்கில் மாத்திரம் ரூபா 6 500 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
   4. ரூபா 9 000 பெறுமதிசேர் வரி உட்பட அபான்ஸ் நிறுவனத்திடம் கனணிக் கடன்கொள்வனவு ரூபா 99 000 கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டது.

5. கடன்பட்டோரால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 20 000 வங்கிக்கூற்றில் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது.
6. வாடகை வருமானமாக பெற்ற தொகை ரூபா 12 500 பொதுப்பேரேட்டில் உரிய வருமானக் கணக்கில் ரூபா 21 000 என பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

**1)** வழுக்களை திருத்துவதற்கான பொதுநாட்குறிப்புப் பதிவுகள்
**2)** தொங்கல் கணக்கு மீதி
**3)** வழுக்களை திருத்திய பின்னர் தொங்கல் கணக்கு மீதி

# MCQ

**4.** பின்வரும் கணக்கீட்டு வழுக்களுள் தொங்கல் கணக்கினை உருவாக்குதற்கான வழுவாக அமைவது?
**1.** விற்பனை நாட்குறிப்பேடானது ரூபா 12 000 எனும் தொகையினால் கூட்டிக்கூட்டல்
**2.** செலுத்திய வாடகை ரூபா 8 000 நிர்வாக செலவுக் கணக்கில் வரவு வைக்கப்படல்
**3.** பதிவழித்த மதிப்புக்குறைப்பு நட்டம் ரூபா 5 000 கணக்குகளில் இருதடவை பதியப்படல்
**4.** உரிமையாளர் பொருள் பற்று ரூபா 9 000 தொடர்பாக பதிவு எதுவும் செய்யாதிருத்தல்
**5.** பெற்ற முதலீட்டு வருமானம் ரூபா 11 000 முதலீட்டு வருமானக் கணக்கில் வரவு வைத்தல்

**5.** பின்வரும் வழுக்களில் பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழு எது?
**1.** காசு விற்பனை ரூபா 30 000 ஏடுகளில் முழுமையாக விடுபட்டுள்ளது.
**2.** பெற்ற கழிவு ரூபா 4 000 கொடுத்த கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
**3.** இயந்திர பழுது பார்த்தல் செலவு ரூபா 18 000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
**4.** உட்திரும்பல் ரூபா 15 000 வெளித்திரும்பல் கணக்கில் செலவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
**5.** விற்பனைப்பட்டியலில் ரூபா 24 000, விற்பனை நாளேட்டில் ரூபா 42 000 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**6.** வரையறுத்த சுசந்தினி பொதுக்கம்பனியின் பரீட்சை மீதி 31.03.2021 இல் சமப்படவில்லை. இவ் வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின் போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- தளபாடக் கொள்வனவு ரூபா 30 000 தளபாட திருத்தற் கணக்கில் வரவு வைக்கப்பட்டது
- பெற்ற வட்டி ரூபா 7 500 பெற்ற வட்டிக் கணக்கில் ரூபா 5 700 என செலவு வைக்கப்பட்டது.
- வியாபார கொடுக்குமதிகளுக்கு செய்த காசோலை கொடுப்பனவு ரூபா 43 000 பொதுப் பேரேட்டில் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் வரவில் ரூபா 34 000 என பதியப்பட்டது.

மேற்கூறிய வழுக்களை திருத்த முன்னர் தொங்கல் கணக்கு மீதி யாது?
**1.** ரூபா 1 800 வரவு
**2.** ரூபா 7 200 வரவு
**3.** ரூபா 10 800 வரவு
**4.** ரூபா 10 800 செலவு
**5.** ரூபா 7 200 செலவு

7. 30.06.2021 இல் கர்ணன் நிறுவனத்தின் பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதியப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- கொடுத்தகழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 12 000 பெற்ற கழிவுக்கணக்கின் வரவுப்பக்கத்தில் பதியப்பட்டது.
- கொடுத்த வாடகை ரூபா 50 000 பெற்ற வாடகையெனக் கருதிப் பதியப்பட்டது.
- காப்புறுதிக்கு கொடுத்த காசு ரூபா 7 500 காப்புறுதிக் கணக்கில் ரூபா 500 எனப் பதியப்பட்டது.
- பற்றுக் கணக்கு மீதி ரூபா 8 000 பரீட்சை மீதியிற்கு கொண்டுசெல்லப்படவில்லை.

இவ்வழுக்களினால் பரீட்சை மீதியானது எந்தளவு தொகையினால் எந்தப்பக்கம் குறைவாக இருந்திருக்கும்?
**1.** ரூபா 7 000 இனால் வரவு பக்கம்
**2.** ரூபா 15 000 இனால் வரவு பக்கம்
**3.** ரூபா 108 000 இனால் செலவு பக்கம்
**4.** ரூபா 120 000 இனால் வரவு பக்கம்
**5.** ரூபா 77 000 இனால் செலவு பக்கம்

Sajith.SP